## தொகுதிகள் மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஏற்கனவே உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது; இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க

# மார்ச் 5 - அன்று அனைத்துக் கட்சிகள் கூட்டம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் – தலைமைச் செயலகத்தில் அளித்த பேட்டியில் அறிவிப்பு!

**சென்னை, பிப். 27 -**

**“தொகுதிகள் மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஏற்கனவே உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க மார்ச் 5 - அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (25.2.2025) தலைமைச் செயலகத்தில், 19–வது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25-02-2025) தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டியின் போது கூறியதாவது:-

இன்றைக்கு நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நிதிநிலை அறிக்கை குறித்து பல்வேறு விளக்கங்களை இந்தத் துறையின் அதிகாரிகள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஒரு முக்கியமான முடிவை எடுத்திருக்கிறோம். அதற்காகத் தான் உங்களை அழைத்திருக்கிறோம்.

• தமிழ்நாடு இன்றைக்கு மிகப்பெரிய உரிமைப் போராட்டத்தை நடத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, வருகிற

மார்ச் 5ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்த இருக்கிறோம்! அதாவது, தேர்தல் ஆணையத்தில் பதிவு பெற்றிருக்கக் கூடிய 40 கட்சிகளை அழைக்க முடிவு செய்து இன்றைக்கு நாங்கள் அவர்களுக்கெல்லாம் கடிதம் அனுப்பயிருக்கிறோம். எதற்கு என்று கேட்டால், தொகுதி மறுசீரமைப்பு விஷயமாக.

### தலைக்கு மேல் தொங்கும் கத்தி!

• தொகுதி மறுசீரமைப்பு என்கின்ற பெயரில் தென்னிந்தியாவின் தலைக்கு மேல் ஒரு கத்தி தொங்கிக் கொண்டிருக்கிறது. எதற்காக சொல்கிறேன் என்றால், அனைத்து வளர்ச்சிக் குறியீடுகளிலும், முதன்மை மாநிலமாக இருக்கக்கூடிய தமிழ்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது! இப்போது தமிழ்நாட்டில் மொத்தம் 39 நாடாளுமன்றத் தொகுதிகள் இருக்கிறது. இதை குறைக்கப்படுகின்ற அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

• ஒன்றிய அரசு 2026ஆம் ஆண்டில், மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை மறுசீரமைப்பு செய்யப் போகிறார்கள். பொதுவாக இவையெல்லாம், மக்கள் தொகையை கணக்கிட்டுத் தான் செய்யப்படுகிறது.

• மக்கள் தொகையை கட்டுப்படுத்த வேண்டும் என்பது இந்திய நாட்டின் மிக முக்கியமான இலக்கு. அந்த இலக்கைப் பொறுத்தவரைக்கும் நம்முடைய தமிழ்நாடு வெற்றி பெற்றிருக்கிறது! அது எல்லோருக்கும் தெரியும்.

• பல பத்தாண்டுகளாக வெற்றிகரமான குடும்பக் கட்டுப்பாடு திட்டங்கள், பெண்கள் கல்வி மற்றும் சுகாதார முன் முயற்சிகள் மூலம் நாம் இதை சாதித்திருக்கிறோம்!

• மக்கள் தொகை குறைவாக இருக்கின்ற காரணத்தினால், நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையும் குறைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்போது நாடு முழுவதும் இருக்கின்ற மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை பிரித்தால், தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய 8 மக்களவை தொகுதிகளை இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். அதாவது இனி தமிழ்நாட்டுக்கு 39 எம்.பி.க்கள் இருக்க மாட்டார்கள். 31எம்.பி.க்கள் தான் இருப்பார்கள்.

### நசுக்கப்படும் தமிழ்நாட்டின் குரல்!

இன்னொரு முறையில் கணக்கிட்டுப் பார்த்தீர்கள் என்றால், நாட்டில் ஒட்டு மொத்த எம்.பி.க்கள் எண்ணிக்கையை உயர்த்தி, அதற்கேற்ப பிரித்தாலும், நமக்கு இழப்புதான் ஏற்படும்!

நமக்கான பிரதிநிதித்துவம் குறைந்து விடும். அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலங்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் கிடைக்கும்! இதனால் தமிழ்நாட்டினுடைய குரல் நசுக்கப்படுகிறது. இது வெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை பற்றிய கவலை மட்டுமல்ல. நம் மாநிலத்தின் உரிமையைச் சார்ந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழ்நாடு எதிர்கொள்ளவிருக்கும் இந்த முக்கியமான பிரச்சினையில், தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்கள் எல்லாம் ஒன்றிணைக்க முதல் கட்டமாக இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறோம். அனைத்துக் கட்சிகளும், கட்சிகளை எல்லாம் மறந்து, அரசியல் எல்லாம் கடந்து இந்த விவாதத்தில் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்று உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

**செய்தியாளர்:-** *இந்த அனைத்து கட்சி கூட்டத்தில் மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற மும்மொழிக் கொள்கை பிரச்சனை சம்பந்தமாக பேசப்படுமா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்: -** மும்மொழிக் கொள்கை மட்டுமல்ல, நீட் பிரச்சனை, மாநில அரசுக்கு தரவேண்டிய நிதிப் பிரச்சனை, அனைத்துப் பிரச்சனைகளுக்கும் நீங்கள் கேட்கின்ற மும்மொழிக் கொள்கை பிரச்சனைக்கும் சேர்த்து தீர்வு காணவேண்டும் என்றால் நம்முடைய எம்.பிக்கள் எல்லாம் அதிகமாக இருந்தால் தான் குரல் கொடுக்கமுடியும். அதுதான் முக்கியத்துவம். அந்த அடிப்படையில் தான் கூட்டம் கூட்டப்படுகிறது.

**செய்தியாளர்:-** *ஒன்றிய அரசிற்கு தொடர்ந்து பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக தொடர்ந்து கடிதம் எழுதியிருக்கிறீர்கள். அரசியல் கட்சித்தலைவர்கள் பல்வேறு பிரச்சனைகளுக்காக போராட்டத்தை நடத்துகிறார்கள். அது பற்றி?*

**முதலமைச்சர்:-** அதற்கு ஒன்றும் பதில் கிடைக்கவில்லை. அமைதியாகத் தான் இருக்கிறார்கள்.

### மொழிப்போருக்கு வித்திடும் ஒன்றிய அரசு!

**செய்தியாளர்:-** *அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டியிருக்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் நீங்கள் step எடுத்துக் கொண்டு தான் இருக்கிறீர்கள். ஆனாலும் கூட தொய்வு அடைந்தது போல இருக்கிறது. ஏன் ஒற்றுமையில்லாமல் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அதிமுகவை வலியுறுத்துவீர்களா?*

**முதலமைச்சர்:-** அ.தி.மு.க.வும் இதில் நிச்சயமாக குரல் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

**செய்தியாளர்:-** *தேசியக் கல்விக் கொள்கை ஏற்றுக்கொள்ள வேண்டும், மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஒன்றிய அரசு தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். மொழிப் போருக்கு ஒன்றிய அரசு வித்திடுகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?*

**முதலமைச்சர்:-** நிச்சயமாக வித்திடுகிறது. அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்.

---

## திருப்பூர் கிழக்கு - தெற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம்!

### பொறுப்பாளர் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!





*திருப்பூர், பிப்.27-*

*திருப்பூர் கிழக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் இன்று (27.02.2025- வியாழக் கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் திருப்பூர், தாராபுரம் சாலையில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலு வலக மான “கலைஞர் அறிவாலயம்”, “தளபதி அரங்கில்” நடைபெற உள்ளது.*

*அதுசமயம் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.*

*பொருள் :1.கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து. 2.கழக ஆக்கப்பணிகள் குறித்து.*

*இவ்வாறு திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் திரும்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.*

---

### மார்ச் – 1 முதல்வர் பிறந்தநாள் விழாவை நலத்திட்ட உதவிகளுடன்

## புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுதும் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

### மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!



*புதுக்கோட்டை, 27-*

*புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் மார்ச் 1 கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள், மரம் நடுதல், ரத்த தானம் செய்தல், கழக கொடி ஏற்றுதல் என பொது மக்களுக்கு பயன்படும் வகையில் எழுச்சியாக கொண்டாடுவோம் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*தமிழ்நாட்டு மக்களின் இதயங்களை தன்பால் தன் வயப்படுத்தி தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஓயாது உழைக்கும் ஒப்பற்ற தலைவருக்கு பிறந்தநாள் விழா. இளமைக்காலம் முதல் இரு வண்ணக் கொடி ஏந்தி, இயக்கம் காத்து தொண்டராய் உழைத்து உழைத்து மாபெரும் இயக்கத்தின் மகத்தான தலைவராக உயர்ந்திட்ட உத்தமருக்கு பிறந்த நாள் விழா, இந்தியாவில் உள்ள மாநில முதல்வர்களிலேயே சிறந்த முதல்வர் என பெயர் பெற்றிருந்தாலும், இந்தியாவின் சிறந்த மாநிலம் தமிழ்நாடு தான் என பெயர் பெறுவதுதான் நமக்கு பெருமை என சூளுரைத்து ஓயாமல் உழைத்து வரும் உன்னத தலைவர், உழைப்பால், தியாகத்தால், தொண்டால், அன்பால், நிர்வாகத் திறமையால், இமயம் என புகழ் பெற்றிருந்த போதும் நம்மை உருவாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் தடம் பற்றி தொண்டரோடு தொண்டராக களத்தில் நின்று இரு வண்ணக் கொடி ஏந்தி களமாடி வருகிற வரலாற்று தலைவனாம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் நல உதவிகள் வழங்குதல் , கண் தானம், ரத்த தானம் செய்தல்*

*மார்ச் 1 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல், நோயாளிகளுக்கு ரொட்டி பழங்கள் வழங்குதல் மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல் மரம் நடுதல் , நீர்நிலைகளை செப்பனிடுதல், கழக கொடி ஏற்றுதல் மற்றும் கவியரங்கம் கருத்தரங்கம், வாழ்த்தரங்கம் நடத்துதல் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் சிறப்பாகவும், எழுச்சியாகவும் கொண்டாடிடுவோம்.*

*இதற்கான ஏற்பாடுகளை மாநில , மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக செய்திட வேண்டும்.*

*இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.*

---

### தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திட்டங்களையும்

## திராவிட மாடல் ஆட்சியையும் மக்களிடம் எடுத்துச் சென்று சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தயாராகுங்கள்!

### மாவட்டக் கழகச் செயலாளர் இராஜேஸ்குமார் எம்.பி. வேண்டுகோள்



*நாமக்கல், பிப். 27 -*

*தேர்தல் நெருங்குவதால் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்களையும், திராவிட மாடல் ஆட்சியையும் மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் கட்சியினர் தயாராக வேண்டும் என நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வேண்டுகோள் விடுத்தார்.*

*நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் மோகனூர் சாலை முல்லை நகரில் உள்ள கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலை வர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார். நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். சேந்தமங்கலம் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தார்.*

*கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். அப்போது, வரும் மார்ச் 1-ஆம் தேதி கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72-ஆவது பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும். அன்று மாவட்டத்திற்கு உள்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் கட்சிக் கொடியேற்றியும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் அவரது பிறந்த நாளை கொண்டாட வேண்டும். கழக முன்னோடிகளுக்கு வேட்டி, சேலை, பொற்கிழி வழங்க வேண்டும். ஆதரவற்றோர் இல்லங்களில் உணவு, பொருட்கள் வழங்குதல், அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்குதல், மரக்கன்றுகள் நடுதல், விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல் உள்ளிட்டவற்றை மேற்கொள்ள வேண்டும்.*

*சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே உள்ளதால், மக்களிடையே அரசின் திட்டங்களை எடுத்துக் கூற வேண்டும். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்திய திட்டங்களால் பெண்கள், மாணவர்கள் அடைந்த பயன்களையும் தெரிவிக்க வேண்டும். கடந்த நான்கு ஆண்டுகளில் முதல்வர் செய்த சாதனைகள், அவர் வழங்கிய திட்டங்களை மக்களிடையே கொண்டு செல்லும் வகையில் பணியாற்ற வேண்டும் என்றார்.*

*கூட்டத்தில் மார்ச் 1 ஆம் தேதியன்று நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் 72ஆம் அகவையில் அடியெடுத்து வைக்கிறார். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான நம் தலைவர் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர வைத்த பெருமையைப் பெற்றுத் தந்துள்ளார்.*

*தந்தை பெரியாரின் சமூகநீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கையையும், தமிழினத் தலைவர் கலைஞரின் சமூகநலத் திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிறார் நமது கழகத் தலைவர் அவர்கள். அத்தகைய பெருமைமிகு தலைவரின் பிறந்த நாளை நாம் அனைவரும் சீரிய வகையில் சிறப்பாக கொண்டாடுவது,*

*மேலும் மார்ச் 1 ஆம் தேதியன்று நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களில் அனைத்து ஊராட்சி, வார்டு, கிளை கழகங்களில் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்குதல், கழக மூத்த முன்னோடிகளுக்கு வேஷ்டி, சேலை மற்றும் பொற்கிழி வழங்குதல்,*

*ஆதரவற்றோர் இல்லங்களில் உணவு மற்றும் மளிகை பொருட்கள் வழங்குதல், அரசு மருத்துவமனையில் உடல் நலக்குறைவினால் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு பால், பிரட் வழங்குதல், பள்ளி மாணவமாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.*

*அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள், நோட்டு, பென்சில், கலர் பென்சில் போன்றவை வழங்குதல், தூய்மை பணியாளர்களுக்கு உணவு மற்றும் மளிகை பொருட்கள் வழங்குதல். , மரக்கன்று நடுதல், விளையாட்டு போட்டிகள் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவி வழங்கி கழக தலைவர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளினை சிறப்பாக கொண்டாடுவது*

*உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது,*

*இந்த கூட்டத்தில், முன்னாள் எம்.எல்.ஏ. கே.ஆர். இராமசுவாமி, டாக்டர் மாயவன், மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், சார்பு அணிகளின் நிர்வாகிகள், நகர மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் மறைவுக்கு இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தினர்.*